

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் தெற்கு பகுதிக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மாபெரும் பொதுக்கூட்டம் பகுதி செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் காரம்பாக்கத்தில் நடைபெற்றது.இவ் விழாவில் கழகப் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கலந்துகொண்டு 2000 பேருக்கு நலத்திட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்.இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன், நிகழ்ச்சிக்கு மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி,இராமாபுரம் வ.செல்வகுமார், வீர.கனிமொழி ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட, பகுதி, வட்டக்கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டனர். நிறைவாக வட்டச் செயலாளர் சி.சுந்தர், மாவட்டப் பிரதிநிதிகள் க.கைலாசம்,இரா.இராஜேந்திரன் ஆகியோர் நன்றி கூறினர்.



சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, நேற்று (11.6.2024) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ள "காலம் உள்ளவரை கலைஞர் நவீன தமிழகத்தின் சிற்பிக்கு வரலாற்று சிறப்புமிக்க நவீன கண்காட்சியகத்தை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று பார்வையிட்டார்.

### கோவை – தி.மு.க. முப்பெரும் விழா!

# திருவண்ணாமலை தெற்கு மாவட்டத்தினர் ஜீன் 15-ல் அலைகடலென அணிவகுப்பீர்!

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



சென்னை, ஜுன் 12-

ஜுன் 15 அன்று கோவையில் நடைபெறும் தி.மு.க. முப்பெரும் விழாவிற்கு, திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் அலைகடலென திரள்வீர் என பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கழக உயர் நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப்பணித் துறை அமைச்சருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கடந்த ஜுன் 8ஆம் தேதியில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தின் படி தமிழினத் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழா - 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி அளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா - சீர் மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்தி சென்ற கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழா அறிவிக்கப்பட்டது.

ஜுன் 15 சனிக்கிழமை அன்று கோவை, கொடிசியா மைதானத்தில் நடைபெற வுள்ள விழாவில், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும் வெற்றி பெற்ற 40 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

ஏனவே திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டக் கழக நிர்வாகி கள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் நிர்வாகிகள், கிளை மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் அலைகடலென திரண்டுவந்து, கோவை முப்பெரும் விழாவினை சிறப்பித்திட கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா! திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

சென்னை,ஜுன்.12-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மற்றும் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (12.6.2024) புதன்கிழமை மாலை 6 மணியளவில் ஸ்டேட் பேங்க் காலனி அண்ணாசிலை அருகில் நங்கநல்லூரில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளரும் சிறுகுறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சருமான தா.மோ. அன்பரசன் தலைமை ஏற்கிறார்.

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் என். சந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

ஆலந்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் ப.குணாளன், நகரச் செயலாளர் டி.பாபு, குன்றத்தூர் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி (எ) விகேகானந்தன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் காஞ்சிபுர மாவட்டக் கழக நிர்வாகிகள் அனை வரும் பங்கேற்கின்றனர்.

167வது வட்டக் கழகச் செயலாளர் ஜெ.நடராஜன் நன்றியுரையாற்றுகிறார்.

### கோ.கார்த்திகேயன் ஏற்பாடு ! ஜே.ஜே.எபினேசர் முன்னிலை !

# 42வது வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் ! நலத்திட்ட உதவிகள் !

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வழங்குகிறார் !

சென்னை,ஜுன்.12-

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 42வது வட்ட சார்பாக பகுதி பிரதிநிதி கோ. கார்த்திகேயன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் ஆர்.கே.நகர் வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா இன்று (12.06.2024 புதன்கிழமை) மாலை 6.00 மணியளவில் திலகர் நகர் குடியிருப்பு ஏ பிளாக் அருகில் நடைபெறுகிறது.

42 வட்டப் பகுதி பிரதிநிதி கோ.கார்த்திகேயன் தலைமை வகிக்கிறார். ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, முன்னிலை வகிக்கிறார்.வட்டச் செயலாளர் ப.குமார் வரவேற்புரையாற்றுகிறார். சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இதில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இரா.லட்சுமணன், ஆர்.வெற்றி வீரன், வழக்கறிஞர் என்.மருதுகணேஷ், என்.அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, எம்.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், வட்டக் கழக செயலாளர் என்.எம.கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நா கராஜன், ச.தமிழ்ச்செல்வன், பொ. து.ராஜா, வி.வடிவேல், வெ.சு. சத்யநாராயணன், சி.மணிக ண்டன், இர.பொன்இளவரசன், ஆ.ரமேஷ்பாபு, பி.சதீஷ்குமார, மல்லா சரவணன், ஒலி ஒளி பாபு, ஜெ.சுரேஷ்பாபு, கே. மோகன், பி.கே.மூர்த்தி, எம். ரூபசங்கர், வி.முத்து, டி.தணிகாச்சலம், பி.அன்பு, எம்.எம். சாமி, ஆர்.ரமேஷ்,

திருப்பதிசாமி, ஆர்.ஜி.பாபு, வி.மோகன், மைக்கேல், கவிதா, ஆ.மணி, ஆர்.சம்பத்குமார், எல்.பிரபாகரன், ஜி.சிவமணி, அன்பரசு,

கழக நிர்வாகிகள் 42 வது வட்ட பாகம் முகவர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

### கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்– திருவொற்றியூர் மேற்கு

# பகுதி முன்னாள் துணை செயலாளர் இ.ரமேஷ் இல்ல மணவிழா வரவேற்பு!

## வி.இராமநாதன் - கே.பி.சொக்கலிங்கம் - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, ஜுன் 12

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன் மாநில இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன்

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவொற்றியூர் மேற்கு பகுதி முன்னாள் துணை செயலாளர் இ. ரமேஷ் அவர்களின் இளைய மகள் இ.ஆர். ஸ்னேகா - என்.தீபக் ஆகியோரின் திருமண விழா இன்று (12.06.2024) சென்னை எம்.கே.பி. நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பாலாத்தமன் திருக்கோவிலில் நடைபெறுகிறது.

அதனைத் தொடர்ந்து அன்று மாலை 6.00 மணி அளவில் சென்னை ரெட்டில்ஸ் பைபாஸில் அமைந்துள்ள ஜி.என்.டி. சாலையில் உள்ள எஸ்.எஸ்.ஆர். பேலஸில் நடைபெறும் திருமண வரவேற்பு விழாவை திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், 5வது வட்ட மாமன்ற உறுப்பினரும், வட்ட கழக செயலாளர் கே.பி.சொக்கலிங்கம், 2வது வட்ட மாமன்ற உறுப்பினர் கோமதி சந்தோஷ்குமார், 14-வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், 14-வது வட்ட கழக செயலாளர் இரா.சந்தர், 14(அ) வட்ட செயலாளர் ஏகா.கார்த்திகேயன், கே.சந்தோஷ் குமார்,


சென்னை வடகிழக்கு மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரட் சுரேஷ் மற்றும் வட்ட கழக, பகுதிக் கழக, மாவட்ட கழகத் தோழர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் கொண்டாடும்

# காலம் உள்ளவரை கலைஞர் - நூற்றாண்டு நிறைவு விழா!

## இன்றைய நிகழ்ச்சிகள் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

கலைஞர் 100 - 89



**அறம், பொருள், இன்பம் சேரட்டும்!**
**ஆதவன் புகழை கூறட்டும்**

**நாள் : 12.06.2024, புதன்கிழமை, காலை: 8.00 மணி**

**இடம் : பெரியார் திடல், வேப்பேரி**

**25 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் கூடிய திருமணத்தை தலைமையேற்று நடத்தி வைப்பவர்**
**எ.வ.வேலு, பொதுப்பணித்துறை அமைச்சர்**

**அன்புடன்: 58வது வட்டம், எழும்பூர் வடக்குதெற்கு பகுதி**

கலைஞர் 100 - 90

**தமிழ் அறம்! கலைஞர் தந்த வரம்!**

**நாள் : 12.06.2024, புதன்கிழமை, மாலை: 6.00 மணி**

**இடம் : யாதவாள் தெரு, பாடி**

**தலைமை : டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.சி., பகுதி செயலாளர்**

**புகுழுரைப்போர் : திருச்சி.என்.சிவா, எம்.பி கழக கொள்கை பரப்புச் செயலாளர்**
**உ.வாசுகி, மத்தியகுழு உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி**
**பேரா.கு.ஞானசம்பந்தன்**

**அன்புடன்: 87வது வட்டம், அம்பத்தூர் தெற்கு பகுதி**

அமைச்சர் **பி.கே. சேகர்பாபு**
செயலாளர். சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

### சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில்

# தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## ஆணையத் தலைவர் எம்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை,ஜுன்.12-

தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நேற்று (11.06. 2024) நடைபெற்றது.

நேற்று (11.06.2024) தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம். வெங்கடேசன் அவர்களின் தலைமையில் தூய்மைப் பணியாளர்களின் நலன் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் பேசியதாவது:

மனிதக் கழிவுகளை அகற்றும் தொழில் புரிவோர் தடுப்பு மற்றும் அவர்களது மறுவாழ்வு சட்டம் 2013, பிரிவு 7ன்படி, எந்தவொரு நபரும், ஒப்பந்ததாரரும் அல்லது எந்தவொரு நிறுவனமும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தவொரு நபரையும் அபாயகரமான முறையில் கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்வதற்கு ஈடுபடுத்தவோ அல்லது பணியமர்த்தவோ கூடாது. அவ்வாறு ஈடுபடுத்தினால், அந்த நபரின் மீது மேற்படி சட்டத்தின் பிரிவு 9ன்படி முதன் முறையாக மீறுபவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 2 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். இரண்டாவது முறையாக மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை அல்லது 5 லட்சம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனைத்து களப்பணியாளர்களையும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தும் நிலையினை உறுதி செய்து களப்பணியாளர்களின் நலனில் அக்கறையோடு இருக்க வேண்டும். மேலும், தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வழங்கிட வேண்டும். அனைத்து பணியாளர்களையும் காப்பீட்டு திட்டத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென தெரிவித்தார்.



மின் கழக தொ.மு.ச. முன்னாள் மாநில பொதுச் செயலாளர் சிங்கார இரத்தின சபாபதி அவர்களின் 4 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மின் கழக தொ.மு.ச. மாநில பிரச்சாரக் குழு செயலாளரும் தெற்கு திட்ட துணைத் தலைவருமான எம்.பி. வெங்கடேசன் தலைமையில் வளசரவாக்கம் உப கோட்டத்தில் அன்னாரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி அனைத்து ஊழியர்களுக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. உடன் வர்த்தகர் அணி மன்மத ராஜ்,கே.கே.நகர் கோட்டச் செயலாளர் என்.பாலாஜி,கோட்ட தலைவர் ஏகாம்பரம், கிளை நிர்வாகிகள் ஆர். ரமேஷ்குமார்,பாபு,திலீப் குமார்,ஜெய்சங்கர், பாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### வழக்கறிஞர் இ. வெங்கடேசன் ஏற்பாட்டில் இ. கண்ணப்பன் தலைமையில்

# மாதவரம் 16வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா!

## மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள்- புழல் எம். நாராயணன் வழங்கினார்!

சென்னை,ஜுன்.12-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி, மற்றும் 16 வது வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வார்டு வாரியாக தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மாதவரம் வடக்கு பகுதி 16 வது வட்டம் சடையங்குப்பம் பகுதியில் அமைந்துள்ள, சென்னை மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகின்றனர்.

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 16 வது வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் இ. வெங்கடேசன் ஏற்பாட்டில் நோட் புக், பென்சில், பேனா, ஜாமென்ட்ரி பாக்ஸ், ஆகியவற்றுடன் இனிப்பு லட்டு வழங்கும் விழா பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

16வது வட்ட செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு, கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி நிர்வாகிகள் துணை செயலாளர் கே. சிவசங்கரன், மாவட்ட பிரதிநிதிகள் நா. மோகன் குமார் நாகூரார்,பா. சந்திரன், பி .தரணி, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் கருணாகரன்,வட்ட நிர்வாகிகள் இ. அருள், ரமேஷ், சி. முத்தையா, புவனேஸ்வரி மகேஷ் குமார்,வி. மாரி, சடையங்குப்பம் கிராம செயலாளர் நைனியப்பன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், குளக்கரை மஞ்சுநாதன், எலந்தனூர் சிவப்பிரகாஷ்,மகேஷ் குமார், கடப்பாக்கம் சாம்ராஜ், பர்மா நகர் முருகன், வக்கீல் சுரேந்தர், சடையங்குப்பம் சுரேந்திரன், ஆர்.விஜய் ஆனந்த், குமார், நந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் சடையங்குப்பத்தில் வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் இ. வெங்கடேசன் ஏற்பாட்டில், வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நினைவு விழாவில் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கவுன்சிலர் ஆ.ராஜேந்திரன், கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பா. சந்திரன், கருணாகரன்,இ. அருள், கே. ஏ.ரமேஷ், சி.முத்தையா, புவனேஸ்வரி மகேஷ்குமார், சிவப்பிரகாஷ், மஞ்சுநாதன், நைனியப்பன், முருகன், சுரேந்திரன், சடையங்குப்பம் வெ. சுரேந்தர், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.